வெம்பக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் எட்டக்காப்பட்டி கிராம ஊராட்சி/
செயல் அலுவலரின் நடவடிக்கைகள்

முன்னிலை: **திருமதி.S.புஷ்பவள்ளி**

வீட்டு மனை பிரிவு அனுமதி எண்: **6/2024** நாள்: **18.01.2024**

பொருள்

குடியிருப்பு மனைப்பிரிவு அங்கீகாரம் வெம்பக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், எட்டக்காபட்டி ஊராட்சி, எதிர்கோட்டை கிராமம் சர்வே எண் 297/6C ல் ஏக்கர் 1 சென்ட் 88 பரப்பளவு இடத்திற்கு குடியிருப்பு மனைப்பிரிவு அங்கீகாரம் ஒப்புதல் வழங்கி உத்தரவிடல்.

பார்வை:

1. மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் விருதுநகர் கடிதம் **ROC No-3EW9RVS1/2023/TCP** விருமா நாள் **14/12/2023.**
2. மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் விருதுநகர் மனைப்பிரிவு வரைபட ஒப்புதல் ம.வ/ந.ஊ.து.கி (விருமா) எண். **06/2024 (0).**
3. தமிழ்நாடு ஊராட்சி கட்டிட விதிகள் **1997**-ன் கீழ் வழங்கப்பட்ட அரசாணை எண்.**255** நாள் **18/08/1997** ஊரக வளர்ச்சித்துறை (சிஉ) நாள் **18/08/1997.**

உத்தரவு:

1. வெம்பக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் எட்டக்காபட்டி ஊராட்சி எதிர் கோட்டை கிராமம் சர்வே எண் **297/6C** ல் ஏக்கர் **1** சென்ட் **88** பரப்பளவு இடத்திற்கு குடியிருப்பு மனை பிரிவு தொழில்நுட்ப

அங்கீகாரம் ஒப்புதல் பார்வை 1ல் கண்ட கடிதத்தின் படி சில நிபந்தனைகளுடன் அனுமதிக்கப்பட்டுள்ளது.

2. கீழ ராஜகுலராமன் சார்பதிவக ஆவண எண்.4863/2023 மூலம் பொது உபயோகத்திற்கான இடங்கள் மற்றும் சாலைகள் இவ்வலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

3. பார்வை 1ல் காணும் கடிதத்தில் நகர் ஊரமைப்பு துறையின் முன் அனுமதி பெறப்பட்டும் வீட்டு மனை பிரிவுகளுக்கு மனைப்பிரிவு அங்கீகாரம் மனை ஒன்றிற்கு ₹ 1000 வீதம் 33 மனைகளுக்கும் கட்டணம் Rs.33,000/- மனுதாரர்களால் செலுத்தப்பட்டுள்ளது. நிலப்பயன் மாற்றக் கட்டணமாக சந்தை மதிப்பீட்டில் மூன்று சதவீதம் செலுத்த வேண்டும் என்ற அடிப்படையில் மனுதாரரின் மொத்த இடத்திற்கான சந்தை மதிப்பீட்டில் மூன்று சதவீதம் Rs.11,300/- மனுதாரர்களால் செலுத்தப்பட்டுள்ளது.

4. எனவே பார்வை 1ல் கண்ட கடிதத்தில் அனுமதி அளிக்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதலின்படியும் இணைத்து வரப் பெற்றுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின் அடிப்படையிலும் உரிய கட்டணங்கள் மனுதாரர்களால் செலுத்தப்பட்டு விட்டதாலும் வெம்பக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் எட்டக்காப்பட்டி ஊராட்சி எதிர் கோட்டை கிராமம் சர்வே எண் 297/6Cல் ஏக்கர் 1 சென்ட் 88 பரப்பளவு உள்ள மனைப்பிரிவுகளில் பதிவு செய்யப்பட்ட சாலை மற்றும் பொது பயன்பாட்டு இடங்கள் நீங்களாக மாவட்ட நகர் ஊறமைப்புத்துறை துணை இயக்குனரால் அனுமதிக்கப்பட்ட வரைபடத்தின் படி 1 முதல் 33 வரையிலான மனைகளுக்கு மட்டும் அங்கீகாரம் வழங்கி இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

5. பார்வை 1ல் கண்ட கடிதத்தில் சொல்லப்பட்ட நிபந்தனைகள் முழுமையாக கடைபிடிக்கப்பட வேண்டும்.

இணைப்பு:

1.வரைபடம் மற்றும் நிபந்தனைகள்

பெறுநர்:

S.சுப்புராஜ்

2/655A, K.S.A ராஜதுரை நகர்,

பூலாவூரணி,

ஆனையூர் கிராமம்,

சிவகாசி மேற்கு.

S. புஸ்பவல்லி
தலைவர்

தலைவர்
எட்டக்காபட்டி ஊராட்சி

எட்டக்காப்பட்டி ஊராட்சி.